மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
**Provincial Department of Education, Northern Province**

**மாதாந்த மதிப்பீடு**

| தரம் - 11 | வணிகக்கல்வியும் கணக்கீடும் | யூலை – 2022 |
|---|---|---|

## பகுதி 1

1) பின்வருவன சில்லறை வியாபாரத்துடன் தொடர்புடைய சில கூற்றுக்கள் ஆகும்
A. இறுதி நுகர்வுக்காகப் பொருட்கள் சேவைகளை விற்பனை செய்தல்.
B. விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள புதிய வகையான பொருட்களை நுகர்வோருக்கு அறிமுகம் செய்தல்.
C. நுகர்வோருக்கு அண்மித்ததாகக் காணப்படல்.
D. சில வேளைகளில் கடனுக்குப் பொருட்களை விற்பனை செய்தல்.
மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சில்லறை வியாபாரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் சரியான விடையாக அமைவது,
(1) A, C யும் (2) B யும் C யும் (3) B யும் D யும் (4) A யும் D யும்

2) வியாபாரம் தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றாகக் கருதக்கூடியது?
(1) இறுதிப் பாவனைக்காக பொருட்கள் விற்பனை செய்யப்படல் சில்லறை வியாபாரமாகும்.
(2) இடைநடுவர்கள் காணப்படுவதனால் முடிவு பொருளின் விலையானது ஒப்பீட்டளவில் உயர்வாகவுள்ளது.
(3) ஒரு பிரதேசத்தின் எல்லையில் சந்தையில் பொருட்கள் விற்பனை செய்தல் மொத்த வியாபாரம் ஆகும்.
(4) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி போன்றன சர்வதேச வர்த்தகத்தின் பிரிவுகளாகும்.

3) வணிகங்களில் சில்லறை வணிகமே கூடுதலாகக் காணப்படுகின்றது. சில்லறை வணிகம் தொடர்பான பிழையான கூற்றாக அமைவது
(1) சிறிய சிறிய அலகுகளாக விற்பனை செய்தல்
(2) இறுதி நுகர்வுக்காக விற்பனை செய்தல்
(3) மீள் விற்பனைக்காக விற்பனை செய்தல்
(4) பல்வேறு வகையான பண்டங்கள் விற்பனை செய்யப்படல்

4) வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை வழங்குவதில் இடைத்தரகர்களாக செயற்படாத தரப்பினர்.
(1) மொத்த விற்பனையாளர் 2) காசாளர் 3) சில்லறை விற்பனையாளர் 4) முகவர்

5) பின்வருவனவற்றுள் சில்லறை வியாபார நடவடிக்கை எது?
(1) ஹரிஷ் என்ற ஒப்பந்தகாரருக்கு கட்டிட நிர்மாணங்களுக்கு தேவையான சீமெந்து பக்கற்றுக்களை விற்பனை செய்தல்.
(2) சந்திரன் விவசாயிடம் தானியங்களை கொள்வனவு செய்து பலசரக்கு வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்தல்.
(3) ஆடைத் தொழிற்சாலையில் இருந்து ஆடைகளை கொள்வனவு செய்து ஆடை விற்பனையகங்களுக்கு விற்பனை செய்தல்.
(4) பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் மாணவர்களுக்கு தேவையான சிற்றுண்டிகளை விற்பனை செய்தல்.

6) சில்லறை வியாபாரத்தின் பண்பு அல்லாதது,
(1) நுகர்வோனுக்கு மிக அண்மித்ததாக இருத்தல்
(2) ஒப்பீட்டு ரீதியில் பொருட்களின் அலகுக்கான விலை குறைவாக இருத்தல்
(3) இறுதி நுகர்விற்காக பொருட்களை விற்பனைசெய்தல்
(4) பல்வகைப் பொருட்கள் விற்பனை செய்யப்படல்



kalvi.lk
Scanned with CamScanner

7) கீழே வியாபார நடவடிக்கை தொடர்பாக சில கூற்றுக்கள் தரப்படுகின்றன.

✓மீனாட்சி பிரபல பாடசாலையொன்றின் சிற்றூண்டிச்சாலை ஒன்றை பொறுப்பேற்று பல்வேறு சிற்றூண்டிகளை மாணவர்களுக்கு விற்பனை செய்கின்றார்.

✓கமலி தனது பிரதேசத்தில் வசிக்கும் அலுவலக பணியாளர்களின் விருப்பத்திற்கேற்ப காலை உணவுகளை தயாரித்து வியாபாரம் செய்கின்றார்.

✓ரதன் பிரபல உணவகமொன்றிற்கு தேவையான சிற்றூண்டிகள் சிலவற்றை தயாரித்து வழங்குகின்றார்.

✓விமலன் தனது கிராமத்தில் உற்பத்தியாகும் பாலினை சேகரித்து நகரப்பகுதியில் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்கின்றார்.

மேலே உள்ள கூற்றுக்கமைய மொத்த வியாபாரியாகக் கருதப்படக் கூடியவர்

(1) மீனாட்சி (2) கமலி

(3) ரதன் (4) விமலன்

8) நடைமுறை வைப்பின் பண்பொன்றாக குறிப்பிட முடியாதது?

(1) வரவு அட்டை பயன்படுத்தலாம்

(2) வங்கிமேலதிகபற்று வசதி கிடைத்தல்

(3) முதலீட்டு வழிமுறையொன்றாக கருதலாம்

(4) நிலையான கட்டளை வசதி கிடைத்தல்

9) காசோலை அடியிதழிலும் காசோலை இதழிலும் காணப்படும் பொதுவான இலக்கமாக அமைவது?

(1) காசோலை இலக்கம் (2) வங்கிக் கிளை இலக்கம் (3) வங்கி இலக்கம் (4) கணக்கு இலக்கம்

10) வியாபார கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்காக ஆரம்பிக்க வேண்டிய கணக்கு

(1) சேமிப்புக் கணக்கு ஆகும். (2) நிலையான வைப்புக்கணக்கு ஆகும்.

(3) நடைமுறைக்கணக்கு ஆகும். (4) வங்கிக் கடன் கணக்கு ஆகும்.

11) இலங்கை வங்கியில் நடைமுறை கணக்கை பேணும் தர்சன் தனது வியாபாரத்திற்கு ரூபா 50000 பெறுமதியான பொருட்களை நுவனிடம் கொள்வனவு செய்தார். இதற்காக தர்சன் காசோலை ஒன்றை நுவனுக்கு வழங்கினார். இக்காசோலையின் கட்டளையிடுபவர் (வரைவுநர்) மற்றும் கட்டளையைப் பெறுபவர் (வரைவுனி) என்பவற்றை ஒழுங்கு முறையில் இருப்பது

(1) இலங்கை வங்கி, நுவன் (2) நுவன், இலங்கை வங்கி

(3) இலங்கை வங்கி, தர்சன் (4) தர்சன், இலங்கை வங்கி

Education கல்வி අධ්‍යාපන

12) வணிக வங்கியில் மட்டுமே ஆரம்பிக்கக்கூடியதும் காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களில ஈடுபடக்கூடியதுமான கணக்கு வகை

(1) சேமிப்புக் கணக்கு (2) நிலையான வைப்புக் கணக்கு

(3) நடைமுறைக் கணக்கு (4) முதலீட்டுக் கணக்கு

13) வணிக வங்கிகள் பிற நிதி நிறுவங்களிலிருந்து வேறுபடுவதற்கான காரணமாக அமைவது

(1) குத்தகைச் சேவைகளை வழங்குதல்

(2) வைப்புக் கணக்குகளைப் பேணிவருதல்

(3) அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கலை பேணல்

(4) நடைமுறை கணக்குகளைப் பேணல்

14) இலத்திரனியல் வங்கியில் (E banking) வழிமுறைகளைக் கொண்டதொகுதி

(1) தன்னியக்க டொலர் இயந்திரம் (ATM) இணைய மூலமான வங்கிச் சேவை (OBS)

(2) அலுவலகக் கோவையிடல், இணைய வங்கிச் சேவை

(3) சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள், தன்னியக்க பணமாற்றீடு

(4) சிறப்புச் சந்தை நடவடிக்கைகள், வங்கிச்சேவைகள்

15) மாலதி இலங்கை வங்கியில் நடைமுறை கணக்கு உள்ள வியாபாரியாவார். தாரணி சம்பத் வங்கியில் நடைமுறைக்கு உள்ள வியாபாரியாவார். இவ்விருவரிடம் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கலின் போது மாலதி தாரணிக்கு காசோலையை வழங்கினார். இதில் கட்டளையிட்டவர், கட்டளையைப் பெறுபவர், கொடுணி என்போரை சரியான ஒழுங்கில் குறிப்பிடுக.

(1) மாலதி, இலங்கை வங்கி, தாரணி

(2) மாலதி, சம்பத் வங்கி, மக்கள் வங்கி

(3) தாரணி, சம்பத் வங்கி, மக்கள் வங்கி

(4) தாரணி, மாலதி, மக்கள் வங்கி



kalvi.lk

Scanned with CamScanner

16) வணிக வங்கியில் நடாத்தப்படுகின்ற கணக்கு வகை ஒன்றின் பயன்கள் கீழே காட்டப்பட்டுள்ளது
A. பணத்திற்கு பாதுகாப்பு கிடைத்தல்
B. வட்டி வருமானம் கிடைத்தல்
C. வரவு அட்டை மூலம் கொடுப்பனவு செய்தல்
மேலே தரப்பட்டுள்ள பண்புகளை உள்ளடக்கிய கணக்கு வகையாக அமைவது
(1) நடைமுறை கணக்கு (2) நிலையான வைப்புக்கணக்கு
(3) சேமிப்பு கணக்கு (4) கால வைப்பு

17) வங்கிகளில் பேணப்படும் நிலையான வைப்புக் கணக்கு/ கால வைப்பு தொடர்பாக பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.
(1) வரவு அட்டைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும்.
(2) நிலையான வைப்புக்காக கிடைக்கும் வட்டிவீதம் வைப்புக் காலத்திற்கமைய வேறுபடும்.
(3) நிலையான வைப்புச் சான்றிதழை பிணையாக வைத்து வங்கியிலிருந்து குறிப்பிட்ட வீதத்தினை கடனாக பெற முடியும்.
(4) நிலையான வைப்பினை பேணுபவர்களுக்கு வைப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

18) நிரல் X ஆனது பணக்கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தும் சாதனங்களையும், Y நிரலானது அச் சாதனங்கள் மூலம் பெறப்படும் சேவைகளையும் குறித்து நிற்கின்றது.

| X | Y |
|---|---|
| 1. கடனட்டை | A. நடைமுறைக் கணக்கை பேணுபவர்கள் பயன்படுத்துவது |
| 2. வரவட்டை | B. வணிக வங்கியில் கடன் அடிப்படையில் வழங்கப்படுவது |
| 3. தன்னியக்க ரெலர் அ்ட்டை | C. வங்கிக் கணக்கில் காணப்படும் பணத்தினை அடிப்படையாகக் கொண்டது |
| 4. காசோலை | D. சேமிப்புக் கணக்கிலிருந்து வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ளும் சேவை |

சரியான முறையில் நிரல் X இனையும், நிரல் Y இணைக்கும் போது காணப்படும் சரியான விடை
(1) D, B, C, A (2) B, A, C, D
(3) C, A, B, D (4) B, C, D, A

19) வணிகரொருவர் காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்ய விரும்புவாராயின் வணிக வங்கி ஒன்றில் ஆரம்பிக்கப்பட வேண்டிய கணக்கு,
(1) சேமிப்புக் கணக்கு (3) நிலையான மற்றும் சேமிப்புக் கணக்கு
(2) நடைமுறைக் கணக்கு (4) மேற்கூறிய எவையுமல்ல

20) இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் கண்ணன் என்பவர் தனது வாடிக்கையாளரான ராகுலனுக்கு ரூ.50,000 இற்கு காசோலை ஒன்றை வழங்கியிருந்தார். காசோலை தொடர்பில் காசோலை வரைபவரையும், பணம் வழங்குவோரையும் முறையே எடுத்துக் காட்டும் விடையாக அமைவது,
(1) இலங்கைவங்கி, கண்ணன் (2) கண்ணன், ராகுலன்
(3) இலங்கைவங்கி, ராகுலன் (4) கண்ணன், இலங்கைவங்கி

(2×20= 40 புள்ளிகள்)



kalvi.lk
Scanned with CamScanner

## பகுதி 11

❖ **சுருக்கமான விடை தருக.**

1. வணிகம் ஒன்றின் செயற்பாடுகளுக்கு உதவும் துணைச்சேவைகள் மூன்றின் பெயர்களைத் தருக.
2. வியாபாரம் என்றால் என்ன?
3. சில்லறை வியாபாரத்தின் முக்கியத்துவம் மூன்று தருக?
4. மொத்த வியாபாரத்தின் பண்புகள் மூன்று தருக.
5. சில்லறை வியாபாரியினால் நிறைவேற்றப்படும் சேவைகள் மூன்று தருக.
6. வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகளைக் குறிப்பிடுக.
7. மொத்த வியாபாரத்திற்கும், சில்லறை வியாபாரத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்று தருக.
8. காசோலையொன்றுடன் தொடர்புபடும் தரப்பினர்களைக் குறிப்பிடுக.
9. காசோலை ஒன்றை வரையும்போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் மூன்று தருக.
10. இலத்திரனியல் பணம் மூலமான கொடுக்கல் வாங்கலின் முக்கியத்துவம் மூன்று தருக.
11. குறுக்குக் கோடிடலின் வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
12. காசோலையொன்றில் புறக் குறிப்பிடல் என்பதனால் கருதப்படுவது யாது?

(3×12= 24 புள்ளிகள்)

13. அகிலா என்னும் நடைமுறைக் கணக்குரிமையாளர் ராமன் என்பவரிடம் கடன் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவாக ரூ 50,000 பெறுமதியான காசோலை ஒன்றினை வழங்கியிருந்தார்.
    (அ) மேற்படி சம்பவத்தின்படி காசோலையினை புறக்குறிப்பிடும் போது காசோலையின் பின்புறத்தில் கையொப்பம் இடவேண்டிய அல்லது பெயரைக் குறிப்பிட வேண்டிய நபர் யார்? (02 புள்ளிகள்)
    (ஆ) மேற்படி காசோலையினை பாதுகாப்பான காசோலையாக மாற்ற வேண்டுமெனின் யாது செய்ய வேண்டும்? (02 புள்ளிகள்)

14. அப்துல்லா என்பவர் யாழ்ப்பாணத்திலுள்ள வெங்காய உற்பத்தியாளரான முருகவேலிடம் பாரியளவில் வெங்காயத்தினை கொள்வனவு செய்து அவற்றை புத்தளத்தில் வாராந்தச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் ஜோன்சனுக்கும், தனது வீட்டின் முன்பகுதியில் காய்கறிகளை விற்பனை செய்யும் காதருக்கும் விற்பனை செய்கின்றார்.
    மேலே தரப்பட்டுள்ள சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு மொத்த வியாபாரியையும், ஒரு சில்லறை வியாபாரியையும் ஒழுங்குமுறையில் பெயரிடுக. (02 புள்ளிகள்)

Education கல்வி

❖ பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக் குறிப்பிடுக.

i. நிலையான வைப்புச் சான்றிதழை எந்தவொரு நபருக்கும் சாட்டுதல் செய்ய முடியும்.
ii. வணிக வங்கியினால் அறவிடப்பட்ட காசோலைப் புத்தகக்கட்டணம், வங்கிக் கட்டணம் என்பன தொடர்பாக வங்கிக் கூற்றின் மூலமே வணிகர் அறிந்து கொள்ளலாம்.
iii. காசோலையொன்று புறக்குறிப்பிடப்படுவதன் மூலம் உரிமை மாற்றம் இடம்பெறுவதை உறுதிப்படுத்த முடிகின்றது.
iv. சில்லறை வியாபாரத்திற்கும், மொத்த வியாபாரத்திற்குமான வேறுபாடு கொள்வனவு செய்தலின் நோக்க அடிப்படையிலேயே தங்கியுள்ளது.
v. காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு ஆரம்பிக்கப்படும் கணக்கு நடைமுறைக் கணக்காகும்.
vi. சிறப்புச் சந்தை ஒரு நிலையான பாரியளவிலான சில்லறை வியாபார அமைப்பாகும்.
vii. காசோலை மூலமான கொடுக்கல் வாங்கல்களை வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.
viii. வங்கிக் கணக்கில் காணப்படும் பணப்பெறுமானத்தினை நேரடியாக கொடுப்பனவு செய்வதற்கு இயலுமான வகையில் வணிக வங்கிகளினால் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் அட்டைகள் கடனட்டை எனப்படும்.
ix. காசோலையொன்றில் பொதுமுறைக் குறுக்குக் கோடிடல் என்பது வங்கியொன்றின் பெயர் குறுக்குக் கோட்டினுள் காணப்படுவதாகும்.
x. புறக்குறிப்பிடல் மூலம் காசோலையொன்றின் உரிமைமாற்றம் இடம்பெறுகின்றது.

(3×10=30 புள்ளி)



kalvi.lk
Scanned with CamScanner